**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 603** **நாள்: 23.10.2026**

**மாண்புமிகு நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர் முனைவர் நெ. மரியவில்சன் அவர்கள், தண்டையார்பேட்டை மண்டலத்தில் ரூபாய் 2.56 கோடி மதிப்பீட்டில் குழந்தைகள் மையம் கட்டடங்கள் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையக் கட்டடங்களை இன்று மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.**

மாண்புமிகு நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர் முனைவர் நெ. மரியவில்சன் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி தண்டையார்பேட்டை மண்டலத்தில் ரூபாய் 2.56 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட 2 குழந்தைகள் மையக் கட்டடங்கள் மற்றும் 2 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்களை மக்கள் பயன்பாட்டிற்கு இன்று (23.10.2026) பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-41க்குட்பட்ட தொப்பை விநாயகர் சாலை, எழில் நகரில் நமக்கு நாமே திட்ட நிதியில் ரூபாய் 31.78 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட குழந்தைகள் மையக் கட்டடத்தையும், வார்டு-38க்குட்பட்ட நேதாஜி நகர், 6ஆவது தெருவில் மூலதன நிதியில் ரூபாய் 39.30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட குழந்தைகள் மையக் கட்டடத்தையும் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, குழந்தைகளுடன் கலந்துரையாடினார்.

இதனைத் தொடர்ந்து, வார்டு-41க்குட்பட்ட கொருக்குப்பேட்டை, சிவாஜி நகர், அம்மன் கோயில் தெருவில் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையத்தின் கூடுதல் கட்டடத்தையும், வார்டு-39க்குட்பட்ட செரியன் நகரில் தேசிய நகர்ப்புற சுகாதார இயக்க நிதி மற்றும் மூலதன நிதியில் ரூபாய் 1.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையக் கட்டடத்தினையும் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

முன்னதாக, எண்ணூர் நெடுஞ்சாலை, ஐ.ஓ.சி. பேருந்து நிலையம் அருகில் உள்ள கால்வாயில் நீர் தங்குதடையின்றி செல்லும் வகையில் ரொபோடிக் எஸ்கவேட்டர் இயந்திரம் மூலம் ஆகாயத்தாமரைகள் மற்றும் வண்டல்கள் உள்ளிட்ட கழிவுகளை அகற்றும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, தொடர்ந்து கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், வார்டு-43க்குட்பட்ட நாகூர் தோட்டம் பகுதியில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பு பகுதியில் ஆய்வு மேற்கொண்டு, அங்குள்ள பொதுமக்களிடம் கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்து, அதன் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும், அப்பகுதியில் தாழ்வான மின்பெட்டியினை உயர்த்தி அமைத்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வுகளில் வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., மாமன்ற உறுப்பினர் திருமதி பா. விமலா, மண்டல அலுவலர் திரு.ஏ.ராஜ்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**